*16*

# கலிலேயாவுக்கு வடக்கில்

## *படிப்பதற்காக கொடுக்கப்பட்டவைகள் #5*

IV. *முதல் பஸ்காவில் இருந்து இரண்டாம் பஸ்கா வரை (தொடர்ச்சி).*
   C. *யூதேயாவிலிருந்து கலிலேயாவுக்கு மாறுதல்.*
      1. *கடந்து செல்லுதலுக்கான காரணங்கள் (மத். 4:12; மாற். 1:14; லூக். 3:19, 20; யோவா. 4:1-3).*
      2. *சமாரியாவில் நடந்த சம்பவம் (யோவா. 4:4-42).*
      3. *கலிலேயா வந்து சேருதல் (லூக். 4:14; யோவா. 4:43-45).*
   D. *கலிலேயாவில் இயேசுவின் போதனை பற்றிய ஒரு பொதுவான விவரம் (மத். 4:17; மாற். 1:14, 15; லூக். 4:14, 15).*
   E. *கானாவூரில் இரண்டாவது அற்புதம் (யோவா. 4:46-54).*
   F. *கலிலேயாவின் கப்பர்நகூமுக்கு மாறுதல் (மத். 4:13-16).*
   G. *நான்கு மீனவர்களை அழைத்தல் (மத். 4:18-22; மாற். 1:16-20; லூக். 5:1-11).*

### அறிமுகம்

*எருசலேமிலும் யூதேயாவிலும் நடைபெற்ற இயேசுவின் தொடக்க கால ஊழியத்தைப் பற்றி யோவான் பதிவு செய்தார். நாம் படிக்க இருக்கும் இந்தப் பாடத்தில், காட்சி வடக்கில் கலிலேயாவுக்கு மாறுகிறது. ஒப்பீட்டு சுவிசேஷங்கள், சுமார் ஒன்றரை ஆண்டுகள் நடந்த "மாபெரும் கலிலேய ஊழியம்" என்று இதன் மீது கவனம் செலுத்துகின்றன. இந்தப் பாடம், அந்த ஊழியத்தின் அடிப்படையான விஷயங்கள் பற்றிக் குறிப்பாகக் கவனம் செலுத்துவதாக இருக்கும்.*

### வடக்கில் செல்லுவதற்கான வேளை (மத். 4:12; மாற். 1:14; லூக். 3:19, 20; யோவா. 4:1-4)

*இயேசுவும் அவரது சீஷர்களும் யூதேயாவில் - யோவான் ஸ்நானனைப் பார்க்கிலும் அதிகமானவர்களுக்குப் போதித்து ஞானஸ்நானம் கொடுத்த வகையில் - வெற்றியை மகிழ்வுடன் அனுபவித்தார்கள் (யோவா. 3:22, 26; 4:1). இந்த வெற்றியின் உச்சத்தில், யூதேயாவிலிருந்து கலிலேயாவுக்குச்*

*செல்லுவதற்கு வேளை நெருங்கியது என்று கிறிஸ்து முடிவு செய்தார். குறிப்பிட்ட இவ்வேளையில் இவ்வாறு செல்லுதலுக்கு இரண்டு காரணிகள் பங்கேற்றன.*

*இந்த தீர்மானத்திற்கு, மத்தேயுவும் மாற்கும் ஒரு காரணத்தைக் கொடுத்தார்கள். மத்தேயு 4:12, "யோவான் ஏரோதினால்[1] காவலில் வைக்கப்பட்டான் என்று இயேசு கேள்விப்பட்டு, கலிலேயாவுக்குப் போய்" என்று கூறுகிறது (மாற். 1:14ஐக் காணவும்). காற்பங்கு தேசாதிபதியான ஏரோது, தனது மைத்துனியும் தனது சகோதரன் பிலிப்புவின் மனைவியு மான ஏரோதியாளுடன் வாழ்ந்து கொண்டிருந்தான்.[2] பயம் இல்லாத யோவான் ஸ்நானன் ஏரோதிடம், "நீர் அவளை வைத்துக் கொள்வது நியாயமல்ல" (மத். 14:4) என்று கூறியிருந்தார். இது ஏரோதியாளை மூர்க்கமான கோபம் அடையச் செய்தது, அவள் யோவானைக் கைது செய்யும்படி ஏரோதைக் கட்டாயப்படுத்தினாள் (மாற். 6:17-19). அந்த அரசன் "யோவானை[யும்] காவலில் அடைத்து வைத்தான்" (லூக். 3:20).*

*யோவான் காவலில் அடைக்கப்பட்ட பின்பு, இயேசு கலிலேயாவுக்கு விலகிச் சென்றார் என்பதை நீங்கள் வாசிக்கின்றபோது, அவர் தம்மையும் அந்தக் காற்பங்கு தேசாதிபதி சிறையில் அடைக்க முடிவு செய்வார் என்பதை அறிந்தவராக ஏரோதிடமிருந்து விலகிச் செல்ல முயற்சி செய்தார் என்பதாக நீங்கள் நினைக்கலாம். உண்மையில் கிறிஸ்து, ஏரோதின் காற்பங்கு தேசத்தின் பகுதிக்குள் கடந்து சென்றுகொண்டிருந்தார் (லூக். 23:6, 7). பின்பு ஏன், யோவானைச் சிறைவைத்த நிகழ்ச்சி இயேசுவைக் கலிலேயாவுக்குச் செல்லும்படி தூண்டியது? சிலர், இயேசு வடக்கில் இருந்த யோவானின் சீஷர்களை உற்சாகப்படுத்துவதற்காக அவர்கள் சிதறிப் போவதிலிருந்து தடுப்பதற்காக அந்தப் பகுதிக்குச்[3] சென்றார் என்று நினைக்கின்றார்கள்.*

*யூதேயாவை விட்டுச் செல்லுதல் பரிந்துரைக்கத் தக்கது என்று கிறிஸ்து முடிவு செய்தது ஏன் என்பதற்கு யோவான் இன்னொரு காரணத்தைக் கூடுதலாகத் தந்தார்: "யோவானைப் பார்க்கிலும் இயேசு அநேகம் பேரைச் சீஷராக்கி ஞானஸ்நானங் கொடுக்கிறாரென்று பரிசேயர் கேள்விப்பட்ட தாகக் கர்த்தர் அறிந்தபோது, யூதேயாவை விட்டு மறுபடியும் கலிலேயாவுக் குப் போனார்" (யோவா. 4:1, 2). இயேசு பரிசேயர்களுடன் நேரடியான மோதலை - சற்றுக் காலமாவது - தவிர்க்க விரும்பினார், எனவே அவர்களின் செல்வாக்கு அதிகமாக உள்ள பகுதியில் இருந்து அவர் விலகிச் சென்றார். இயேசுவும் அவரது சீஷர்களும் யூதேயாவில் சுமார் ஒரு ஆண்டைச் செலவிட்ட பின்பு, "யூதேயாவை விட்டு மறுபடியும் கலிலேயாவுக்குப் போனார்[கள்]" (யோவா. 4:2).[4]*

## ***ஓய்வெடுக்க ஒரு நிறுத்தம்***
## ***(யோவா. 4:4-42)***

*சமாரியா நாட்டின் வழியாகச் செல்லுதல் என்பதே யூதேயாவில் இருந்து கலிலேயாவுக்குச் செல்லுவதற்கு நேரடியான வழியாக இருந்தது,[5]*

*ஆனால் பெரும்பாலான யூதர்கள், சமாரியர்களின் மீது தாங்கள் கொண்டிருந்த வெறுப்பின் காரணமாக, யூதேயாவிலிருந்து கலிலேயாவுக்கு ஒரு சுற்றுவழியை மேற்கொண்டார்கள்: அவர்கள் கிழக்கில் பயணமாகி, யோர்தானைக் கடந்துசென்று, பின்பு கலிலேயாவுக்குக் கடந்து செல்லக் கூடும் வரையிலும் அவர்கள் அந்த நதியின் கிழக்குக் கரையோரமாகவே பயணம் செய்வார்கள். ஆயினும் இயேசு வடக்கு நோக்கி சமாரியாவினூடாகப் பயணம் செய்தார்.*

*கிறிஸ்து ''சமாரியா நாட்டின் வழியாகப் போக வேண்டியிருந்தபடியால்'' (யோவா. 4:4) என்று யோவான் எழுதினார். ஒருவேளை அவர் துரிதமாய் போக வேண்டியிருந்ததால் அவ்வாறு செல்ல "வேண்டியிருந்திருக்கலாம்.'' அவர் நேரடியான வழியில் செல்வதனால் மூன்று நாள் பிரயாண காலத்தைச் சேமிக்க முடிந்தது. ஆயினும் இந்தக் கருத்தை, அவர் சில நாட்கள் சமாரியாவில் தங்கினார் என்ற உண்மை (யோவா. 4:40) ஏற்பில்லாததாக ஆக்குகிறது. அவர் சமாரியர்களுடன் தொடர்பு ஏற்படுத்துவதற்காகவே சமாரியா நாட்டின் வழியே ''போக வேண்டியிருந்தது'' என்பதே அதிகம் ஏற்புடையதாக உள்ளது. யூதர்கள், இழிவான கலப்பின மக்களாகக் கருதிய ஒரு மக்களினத்தில் இயேசு ''அறுப்புக்கு விளைந்திருக்கிற'' (யோவா. 4:35) நிலம் ஒன்றைக் கண்டார்.*

*சமாரியாவின் இருதயம் போன்ற மையப்பகுதியில், ஒரு கிணற்றண்டையில் இயேசு ஒரு பெண்ணைச் சந்தித்தார், இது கிறிஸ்துவின் ஊழியத்தின் பின்னிகழ்வுகளில் மிகவும் குறிப்பிடத்தக்க பரிமாற்றமாக இருந்தது.அந்தப் பெண்ணுடன் இயேசுவின் உரையாடலானது, தேவபக்தியற்றவர்களை விசுவாசத்திற்குள் கொண்டு வருவதற்கு ஒரு முன்னுதாரணமாகப் படிக்கப்பட்டுள்ளது: அவளுடன் அவர் எவ்வாறு தொடர்பு ஏற்படுத்தினார், அவளது ஆர்வத்தை அவர் எவ்வாறு தூண்டினார், அவளை அவர் எவ்வாறு திருத்தினார், அவளை அவர் புதிய சத்தியத்திற்குள் எவ்வாறு வழிநடத்தினார், அவளது பாவத்தை அவர் எவ்வாறு உணர்த்தினார், மற்றும் சிறப்பாக, அவளுடைய இருதயத்தில் விசுவாசத்தை அவர் எவ்வாறு மேம்படுத்தினார்.*

*இந்த ஒரு தொடர்பின் விளைவாக, கிறிஸ்து அந்த நகரம் முழுவதற்கும் போதிக்கக் கூடிய வாய்ப்பை பெற்றார், "... அவருடைய உபதேசத்தினிமித்தம் இன்னும் அநேகம்பேர் விசுவாசித்து ..." என்று வாசிக்கின்றோம் (யோவா. 4:41).*

## ***கலிலேயாவில் ஊழியம் தொடங்குகிறது (மத். 4:13-17; மாற். 1:14, 15; லூக். 4:14, 15; யோவா. 4:43-54)***

*சமாரியர்களுடன் இரண்டு நாட்கள் இருந்த பின்பு (யோவா. 4:43), இயேசுவும் அவரது சீஷர்களும் தங்கள் பயணத்தை மீண்டும் தொடர்ந்து எஸ்தரலோனின் சமவெளியின் ஊடாக வடக்கு நோக்கிப் பயணமானார்*

கள். கடைசியில் அவர்கள் கலிலேயாவின் தெற்கு குன்றுகளை அடைந்தார்கள். இந்த மாகாணத்தில் கிறிஸ்து தமது மாபெரும் ஊழியத்தைச் செய்வார்.

அக்காலத்தில், எருசலேமும் யூதேயாவும் யூதத்துவத்தின் இருதயம் போன்ற மையப்பகுதியாக இருக்கும்போது, கலிலேயாவில் இயேசு தமது முயற்சிகளில் கவனம் செலுத்தியது ஏன்? இவ்விடத்தில் சாத்தியமான மூன்று காரணிகள் உள்ளன: (1) இயேசு கலிலேயாவில் வளர்ந்தவர், எனவே இது அவருக்கு மிகவும் பழக்கப்பட்ட பகுதியாக இருந்தது; (2) கலிலேயா, மக்கள் தொகை அதிகமாயிருந்த பகுதியாக இருந்தது; மற்றும் (3) கலிலேயர்கள் யூதேயாவில் இருந்தவர்களைவிட அதிகமாக வசனத்தை ஏற்றுக்கொள்பவர்களாக இருந்தார்கள், இவர்கள் மதப் பாரம்பரியத்தினால் குறைவாகவே மயக்கப்பட்டிருந்தார்கள். யூதாஸ்காரியோத்தைத் தவிர மற்ற அப்போஸ்தலர்கள் யாவரும் கலிலேயர்களாகவே இருந்தார்கள்.

### இதயம் குளிரச் செய்த வரவேற்பு

யூதேயாவில் இயேசு செய்த ஊழியம் பற்றிய செய்தியானது அவருக்கு முன்பாக[கலிலேயாவுக்கு]ச் சென்றிருந்தது. யோவான் 4:45, ‘‘அவர் கலிலேயாவில் வந்தபோது, எருசலேமில் பண்டிகையிலே அவர் செய்த எல்லாவற்றையும் பார்த்திருந்த கலிலேயர் அவரை ஏற்றுக்கொண்டார்கள்; அவர்களும் பண்டிகைக்குப் போயிருந்தார்கள்’’ என்று கூறுகிறது (யோவா. 2:23ஐக் காணவும்).[6]

இயேசு யூதேயாவில் தாம் செய்தது போலவே [கலிலேயாவிலும்] பிரசங்கிக்கத் தொடங்கினார். மாற்கு, “இயேசு கலிலேயாவிலே வந்து, தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து: ‘காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று; மனந்திரும்பி சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்’[7] என்றார்” என்று பதிவு செய்திருக்கிறார் (1:14ஆ, 15; மத். 4:17யும் காணவும்). லூக்கா, “அவர்களுடைய ஜெப ஆலயங்களில் அவர் உபதேசித்து, எல்லாராலும் புகழப்பட்டார்” (4:15)[8] என்று எழுதினார். இது ஒரு மங்களகரமான தொடக்கமாக இருந்தது.

### அற்புதங்கள்

இயேசு யூதேயாவில் செய்திருந்தது போல் இங்கும் அற்புதங்களை நிகழ்த்தத் தொடங்கினார். லூக்கா 4:14, “பின்பு இயேசு ஆவியானவருடைய பலத்தினாலே கலிலேயாவுக்குத் திரும்பிப் போனார்” என்று கூறுகிறது. இது, இயேசு அற்புதங்களைச் செய்வதினால் “ஆவியானவரின் வல்லமையை” பயன்படுத்துவதைக் குறிப்பிடுகிறது. இயேசு திரும்பிய பின்பு முதல் அற்புதம்[9] கானா ஊரில் நடைபெற்றது.

இயேசு, “தாம் தண்ணீரைத் திராட்ச ரசமாக்கின கலிலேயாவிலுள்ள கானா ஊருக்கு மறுபடியும் வந்தார்” (யோவா. 4:46). ஒருவேளை அந்த ஊரிலிருந்து வந்திருந்தவரான நாத்தான்வேல் (யோவா. 21:2), தம் வீட்டிற்கு அவரை [இயேசுவை] அழைத்திருக்கலாம். அருகில் இருந்த கப்பர்நகூம்[10] ஊரில் ‘‘ராஜாவின் மனுஷரில்’’[11] ஒருவருடைய மகன் ‘‘மரண அவஸ்தையாய்’’ இருந்தார் (யோவா. 4:46, 47). இயேசு கானா ஊரில்

இருந்ததை அறிந்த இவர், தமது மகனைக் குணமாக்கும்படி கேட்டுக் கொள்வதற்காக கானா ஊருக்கு விரைந்தார்.

அந்த அலுவலர், இயேசுவைக் கப்பர்நகூமுக்கு வரும்படி கெஞ்சினார், ஆனால் கிறிஸ்து அவரிடம், "நீ போகலாம், உன் குமாரன் பிழைத்திருக்கிறான்" என்றார் (யோவா. 4:50).[12] இயேசுவில் விசுவாசம் கொண்ட அம்மனிதர் தம் இல்லம் நோக்கித் திரும்பத் தொடங்கினார். அவர் அங்கு சேர்ந்தபோது, தமது மகன் பிழைத்திருக்கிறான் என்று இயேசு கூறிய அதே வேளையில் அம்மகன் வியாதி நீங்கி சுகமானதை அறிந்தார் (யோவா. 4:50-53அ).[13] ஆழ்ந்த மனப்பதிவு பெற்ற அந்த ராஜாவின் மனுஷன், "அவனும் அவன் வீட்டாரனைவரும் விசுவாசித்தார்கள்"[14] (யோவா. 4:53ஆ).

இந்த மற்றும் பிற அற்புதங்கள் பற்றிய செய்தியானது "சுற்றிலும் இருக்கிற தேசமெங்கும் பரம்பிற்று" (லூக். 4:14ஆ). இயேசுவின் பெயர் ஒவ்வொரு உதட்டிலும் இருந்தது.

**கப்பர்நகூமுக்கு மாறுதல்**

கப்பர்நகூமைத் தமது இயக்கங்களின் அடிப்படை இடமாக்குதல் என்பதே கலிலேயாவில் இயேசுவின் முதல் நடவடிக்கைகளில் ஒன்றாக இருந்தது.[15] இயேசு "கலிலேயாவுக்குப் போய், நாசரேத்தை விட்டு, செபுலோன் நப்தலி என்னும் கடற்கரைக்கு அருகான கப்பர்நகூமிலே வந்து வாசம் பண்ணினார்" (மத். 4:12ஆ, 13அ) என்று மத்தேயு எழுதினார்.[16] கப்பர்நகூமில் இயேசுவுக்கு ஒருக்காலும் சொந்தமாக வீடு ஒன்று இருந்ததில்லை (மத். 8:20), ஆனால் அவரது சீஷர்களில் சிலருக்கு அங்கு சொந்தமாக வீடு இருந்தது (மாற். 1:21, 29). இந்த இடத்திலிருந்து, கிறிஸ்து தமது கலிலேய ஊழியம் முழுவதிலும் கப்பர்நகூமில் இருந்து தொலைவில் சென்று விடவில்லை. அவர் அந்த நகரத்தை விட்டுப் பயணமாகிப் பின்பு அங்கு மீண்டும் திரும்பி வருவார். (மாற். 1:21, 29, 38, 39; 2:1ஐ வாசிக்கவும்.)

கப்பர்நகூம் நகரானது "செபுலோன் நப்தலி நாடுகளின் எல்லைகளில்" இருந்தது (மத். 4:13ஆ), இது இஸ்ரவேலர்கள் கானானுக்குள் பிரவேசித்த போது அந்த இரு கோத்திரங்களுக்கும் ஒதுக்கப்பட்ட பொதுவான பகுதியாக இருந்தது (யோசு. 19). இயேசுவின் பயணமானது புகழ்பெற்ற மேசியாத்துவத் தீர்க்கதரிசனம் ஒன்றின் நிறைவேற்றமாக இருந்தது என்று மத்தேயு தமது வாசகர்களுக்குத் தகவல் தெரிவித்தார் (மத். 4:14-16; ஏசா. 9:1, 2ஐக் காணவும்[17]).

## உதவி தேவைப்பட்டது!

## (மத். 4:18-22; மாற். 1:16-20; லூக். 5:1-11)

வடக்கு மாகாணங்களில் ஒரு உத்வேகமான முகாமைத் தொடங்குவதற்கு ஒவ்வொன்றும் இயேசுவுக்காகத் தக்க இடத்தில் வைக்கப்பட்டிருந்தது. அவருக்கு இன்னும் ஒரே ஒரு கூறு மட்டும் தேவைப்பட்டது: முழு நேர சீஷர்கள். மத்தேயு 4, மாற்கு 1 மற்றும் லூக்கா 5 ஆகியவை நான்கு மீனவர்களை அழைத்தல் பற்றிக் கூறுகின்றன: பேதுரு, யாக்கோபு,

*யோவான் மற்றும் அந்திரேயா. இது பெரும்பாலான அல்லது எல்லா மனிதர் களுக்குமான இரண்டாவது அழைப்பாக இருந்தது, ஏனெனில் அவர்கள் இயேசுவின் யூதேயா ஊழியத்தின்போது அவரது சீஷர்களாக இருந்திருந்தார்கள்.[18]*

*நமது பாடம் தொடருகையில், சீஷர்களாயிருக்கும்படி இயேசு அழைத்த அழைப்பில் மூன்று படிநிலைகள் இருந்தன என்பதை நாம் கண்டறிவோம். அவரைப் பின்பற்றி அவரிடமிருந்து கற்றுக்கொள்ளுதலுக் கான அழைப்பு என்பது முதலாவது படிநிலையாக இருந்தது. இந்த அழைப்பானது - தங்கள் முந்திய தொழிலுக்குத் திரும்பிச் சென்ற மீனவர் களால் விவரிக்கப்பட்டபடி - குடும்பத்தையும் வேலையையும் விட்டு வருதல் என்பதை உள்ளடக்க வேண்டியிருந்ததில்லை. இயேசு தமது ஊழியத்தின்போது, பகுதி நேர ஊழியர்கள் பலரைக் கொண்டிருந்தார். ஒருமுறை அவர் எழுபது சீஷர்களைப் பிரசங்கிக்க அனுப்பினார் (லூக். 10:1-20).*

*முழு நேர சீஷத்துவம் என்பது இரண்டாவது படிநிலையாக இருந்தது. இந்த அழைப்புக்குப் பதில் கொடுத்த சீஷர்கள் இயேசுவுடன் பயணித்து அவருடன் வாழ்வார்கள். இந்த சீஷர்களின் எண்ணிக்கை கணிசமான அளவுக்கு மிகவும் சிறியதாக இருந்தது. நமது தற்போதய வேத பாடப் பகுதிகளில் உள்ள நான்கு மனிதர்களுக்கான அழைப்பானது இந்த இரண்டாவது வகையைச் சேர்ந்ததாக உள்ளது.*

*இயேசு தமது சீஷர்களில் இருந்து பன்னிருவரை அப்போஸ்தலர்களாக இருக்கும்படி தேர்ந்து கொண்டது என்பது மூன்றாவது படிநிலையை அடைவதாயிருக்கும். அந்தத் தனிச்சிறப்பான தருணம் பற்றி நாம் பிற்பாடு படிப்போம். இருப்பினும், இப்போது, இயேசுவின் நிலைத்த துணையாளர் களாக இருக்கும்படி நான்கு மீனவர்கள் அழைக்கப்பட்டதின் மீது கவனம் செலுத்த நாம் விரும்புகின்றோம்.*

*ஒப்பீட்டு சுவிசேஷ விவரங்கள் மூன்றும் இந்த அழைப்பைப் பற்றிக் கூறுகின்றன. அம்மூன்று சுவிசேஷ விவரங்களும் ஒரு ஒப்பீடாக ஒன்றாக வைக்கப்படுவதில் சிரமத்தை செயல்விளக்கப்படுத்துகின்றன. மத்தேயுவும் மாற்குவும் நான்கு மனிதர்கள் அழைக்கப்பட்டதாகக் குறிப்பிட, லூக்கா மூன்று பேர்களை மட்டுமே குறிப்பிடுகின்றார். நீங்கள் மத்தேயு மற்றும் மாற்குவின் சுவிசேஷ விவரங்களை மட்டும் வாசிக்க வேண்டியிருந்தால், அங்கு வேறு எவரும் இருந்தார்களா என்று அறிய மாட்டீர்கள், ஆயினும் இயேசு ஒரு கூட்டத்தாருக்குப் பிரசங்கித்துக் கொண்டிருந்தார் என்று பதிவு செய்து, மாபெரும் மீன்பிடிப்பு பற்றிய அற்புதத்தையும் எடுத்துரைத்தார்.*

*இந்த வேறுபாடுகளின் காரணமாகச் சிலர், மத்தேயு, மாற்கு கூறுவதினின்று மாறுபட்ட ஒரு நிகழ்ச்சியை லூக்கா கூறுவதாக முடிவு செய்துள்ளார்கள். ஆயினும், இது ஒரே நிகழ்ச்சிதான் என்பதைப் பல்வேறு விவரங்கள் சுட்டிக் காண்பிக்கின்றன. மூன்று விவரங்களுமே பின்வருவன வற்றைக் குறிப்பிடுகின்றன: (1) ஒரே இடம் - கலிலேயாக் கடல்[19] (மத். 4:18; மாற். 1:16; லூக். 5:1); (2) அதே மூன்று மனிதர்கள் - பேதுரு, யாக்கோபு மற்றும் யோவான் (மத். 4:18, 21; மாற். 1:16, 19; லூக். 5:3, 10[20]); (3) ஒரே*

*நடவடிக்கை - வலைகளைச் சுத்தம் செய்தல்/பழுது பார்த்தல் (மத். 4:21; மாற். 1:19; லூக். 5:2); (4) ஒரே அழைப்பு - மனிதர்களைப் பிடிப்பவர்களாக இருப்பது (மத். 4:19; மாற். 1:17; லூக். 5:10) மற்றும் (5) ஒரே பதில்செயல் - பணியை விட்டு அவரைப் பின் செல்லுதல் (மத். 4:20, 22; மாற். 1:18, 20; லூக். 5:11).*

*இவைகள் ஒரே நிகழ்ச்சியைக் குறிப்பிடுகின்றன என்றால், இந்த விவரங்கள் எவ்வாறு ஒப்புரவாக்கப்பட முடியும்? பின்வரும் காட்சியைக் கற்பனை செய்யுங்கள்:[21]*

*இயேசுவும் அவரது சீஷர்களும் கலிலேயாவுக்குத் திரும்பியபோது, சீஷர்களில் நான்குபேர் - பேதுரு, யாக்கோபு, யோவான் மற்றும் அந்திரேயா ஆகியோர் - கலிலேயாக் கடலில் மீன்பிடித்தல் என்ற தங்கள் தொழிலுக்குத் திரும்பினார்கள். ஒரு நாள் காலை வேளையில், அதிகாலையில், இந்த மனிதர்கள் வழக்கமாக மீன் பிடிக்கும் இடத்திற்கு இயேசு சென்றார். பலனற்ற இரவு ஒன்றிற்குப் பின்பு, யாக்கோபுவும் யோவானும் ஏற்கனவே வேலையை விட்டுவிட்டு கடற்கரையில் வலைகளைச் சுத்தம் செய்து பழுது நீக்கிக் கொண்டிருந்தார்கள். மற்றவர்களைக் காட்டிலும் விடாப்பிடியாக இருந்த பேதுரு தொடர்ந்து முயற்சி செய்து கொண்டிருந்தார்; கடைசியில் அவரும் கூடத் தோல்வியை ஒப்புக்கொள்ள வேண்டியிருந்தது. அவரும் அந்திரேயாவும் கரைக்குத் திரும்பினார்கள்.*

*இந்த வேளையில், இயேசு அங்கிருந்தார் என்ற செய்தி பரவிற்று. ஒரு கூட்டம் கூடியது. இயேசு அவர்களுக்குப் பிரசங்கிக்கத் தொடங்கினார். மக்கள் அவரை நெருக்குகையில், அவர் பேதுருவின் படகில் ஏறி, அதை கடலினுள் சற்று தூரம் செலுத்தும்படி கூறினார். பிரசங்க மேடையாக மாற்றப்பட்ட படகிலிருந்து அவர் தமது பிரசங்கத்தை முடித்தார்.*

*இது ஒரு வழக்கத்திற்கு மாறான அற்புதத்தால் தொடரப்பட்டது: மீனவர்களைத் திகைக்கச் செய்யவும் பேதுருவை முழந்தாளிடவும் செய்த குறிப்பிடத்தக்க அளவிலான மீன்பிடிப்பு.[22] இவ்விதமாக இயேசு, தமது அழைப்பிற்குப் பதில்செயல் செய்யும்படி அந்த மீனவர்களின் இருதயங் களை ஆயத்தம் செய்தார். இந்த அழைப்பையும் அவர்களின் பதில்செயலை யும் மத்தேயு பதிவு செய்தார்: " 'என் பின்னே வாருங்கள், உங்களை[23] மனு ஷரைப் பிடிப்பவர்களாக்குவேன்' என்றார். உடனே அவர்கள் வலைகளை விட்டு அவருக்குப் பின்சென்றார்கள்" (மத். 4:19, 20; மற்றும் 4:21, 22; மாற். 1:17-20 ஆகியவற்றைக் காணவும்). லூக்காவின் சுவிசேஷ விவரம் அடிப்படையில் இதே போன்றுள்ளது, அது பின்வரும் வார்த்தை களில் இயேசுவின் அழைப்பையும் அவர்களின் பதில்செயலையும் மேற்கோள் காண்பிக்கிறது: " '... இதுமுதல் நீ மனுஷரைப் பிடிக்கிறவனா யிருப்பாய்' என்றார். அவர்கள் படவுகளை கரையில் கொண்டுபோய் நிறுத்தி, எல்லாவற்றையும் விட்டு, அவருக்குப் பின்சென்றார்கள்" (லூக். 5:10, 11).*

*இவ்வழிமுறையில் இயேசு, நிரந்தரமான மற்றும் இடையூறற்ற சீஷத்துவத்திற்காக முதல் மனிதர்களை அழைத்தார். இந்த நிகழ்ச்சியானது தொலை தூர விளைவுகளைக் கொண்டிருந்தது. இப்போது இயேசு இரவும் பகலும் துணையாளர்களைப் பெற்றிருப்பது மட்டுமின்றி, இந்த நால்வரும்*

*தேர்ந்தெடுக்கப்பட்ட பன்னிரு அப்போஸ்தலர்களில் மூன்றில் ஒரு பங்கினராக இருப்பார்கள், மற்றும் இந்த நால்வரில் மூவர் இயேசுவின் விசேஷித்த "உள்ளான வட்டத்தில்" இருப்பவர்கள் ஆவார்கள் (மாற். 5:37; 9:2; 14:33).*

## முடிவுரை

*இயேசுவின் கலிலேய ஊழியத்திற்கு ஒவ்வொன்றும் தயாராக இருந்தது. அடுத்த பாடத்தில் நாம், இயேசு இந்த மாகாணத்தில் தமது பிரசங்கம் மற்றும் குணமாக்கும் பயணத்தை எவ்வாறு தொடங்கினார் என்று காண்போம். உணர்வெழுச்சியூட்டும் நாட்கள் வரவிருந்தன!*

---

குறிப்புகள்

*[1]மத்தேயு 14:1-12; மாற்கு 6:14-29 ஆகிய வசனப்பகுதிகளைக் காணவும். [2]இப்புத்தகத்தில் ''ஏரோதுகளில் சிலர்'' என்ற அட்டவணையில் காணவும். [3]அயினோன் என்ற இடம் (யோவா. 3:23) யூதேயாவின் வடக்குப் பகுதியில் இருந்தது என்று பலர் நினைக்கின்றார்கள். இது சமாரியாவில் இருந்திருக்கலாம். (''இப்புத்தகத்தில் கூறிமுடிக்கப்பட்டுள்ள கிறிஸ்துவின் பயணங்கள்'' என்ற பட்டியலுடன் இணைந்துள்ள வரைபடத்தில் காணவும்). [4]யோவான் 4:8, இயேசுவின் சீஷர்கள் அவருடன் பயணம் செய்தார்கள் என்று நாம் அறியச் செய்கிறது. [5]"இப்புத்தகத்தில் கூறிமுடிக்கப்பட்டுள்ள கிறிஸ்துவின் பயணங்கள்" என்ற பட்டியலுடன் இணைந்துள்ள வரைபடத்தில் காணவும். [6]யோவான் 4:44ல், யோவான் ஒரு வினோதமான குறிப்பைச் செருகினார். நாம், "ஒரு தீர்க்கதரிசிக்குத் தன் சொந்த ஊரிலே கனமில்லையென்று இயேசு தாமே சொல்லியிருந்தார்" என்று வாசிக்கின்றோம். இது, இயேசு ஏன் யூதேயாவை விட்டுச் சென்றார் என்பதற்கான விளக்கத்தின் ஒரு பகுதியாக இருக்கலாம் - ஆனால் சுவிசேஷ விவரத்தின் மற்ற பகுதிகள் எல்லாவற்றிலும் கலிலேயாவே இயேசுவின் "சொந்த நாடு" என்ற கருத்து முன்னிறுத்தப்பட்டுள்ளது. ஒருவேளை, இது இயேசு கலிலேயாவில் தமக்களிக்கப்பட்ட வரவேற்பு வெகுநாள் நீடித்திராது என்பதை சுட்டிக் காண்பித்த முன் சிந்தனை நோக்கமாக இருந்திருக்கலாம். (மத். 13:57; மாற். 6:4; லூக். 4:24 ஆகியவற்றைக் காணவும்.) [7]''மனந்திரும்பி விசுவாசித்தல்'' என்பதற்கான கட்டளை ஓரளவுக்கு வழக்கமற்றதாக உள்ளது. பொதுவாக மக்கள் முதலில் இயேசுவில் விசுவாசம் கொண்டு, அதன் காரணமாகவே தங்கள் பாவங்களில் இருந்து மனந்திரும்புகின்றார் கள். ஏற்கனவே தேவன்மீது அடிப்படை விசுவாசம் கொண்டு வேத வசனங்களைப் பற்றிய அறிவு சிலவற்றைக் கொண்டிருந்த யூதர்களுக்கு இயேசு பிரசங்கித்துக் கொண்டிருந்தார் என்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள். அவர்கள் முதலில், தேவனுடைய பிரமாணத்தைத் தாங்கள் கடைப்பிடிக்கத் தவறியதற்காக மனம் வருந்த வேண்டியது அவசியமாக இருந்தது. பின்பு அவர்கள் மேசியா(கிறிஸ்து)வைப் பற்றிக் கற்றுக்கொண்டு அவரை விசுவாசிக்க வேண்டியிருந்தது. [8]சட்டப்படியாக, ஜெப ஆலயங்களில் ஓய்வுநாட்களில் இருமுறையும், திங்கள்கிழமையன்று ஒருமுறையும், வியாழக்கிழமையன்று ஒருமுறையும், முறையான கூட்டங்கள் நடைபெற்றன. திங்கள்கிழமைகளும் வியாழக்கிழமை களும் பல நகரங்களில் "சந்தை நாட்களாய்"*

*இருந்தன, அந்த நாட்களில் ஏராளமான கூட்டம் கூடும் என்பது உறுதி. மற்ற வேளைகளில் முறைசாராக் கூட்டங்களுக் காகவும் ஜெப ஆலயங்கள் திறக்கப்படக் கூடியவைகளாக இருந்தன. இந்த சூழ்நிலைகள் பிரசங்கிப்பதற்கு மிக உன்னதமான வாய்ப்புக்களை இயேசுவுக்கு அளித்தன. [9]யோவான் 4:54ல் உள்ள "இரண்டாம் அற்புதம்" என்ற சொற்றொடரானது கலிலேயாவில் நடைபெற்ற இரண்டாவது அற்புதத்தைக் குறித்தது என்பது தெளிவு; தண்ணீரைத் திராட்ச ரசமாக்கியது (யோவா. 2:11) முதலாவது அற்புதமாகவும், இது இரண்டாவது அற்புதமாகவும் இருந்தது. யூதேயாவில் இருந்தபோது இயேசு அங்கும் அற்புதங்களை நிகழ்த்தியிருந்தார் அவை இவ்விடத்தில் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை (யோவா. 2:23; 3:2). [10]கப்பர்நகூம் என்ற ஊரானது வடக்கில், கானாவூரில் இருந்து சுமார் இருபது மைல்கள் கிழக்கில் இருந்தது. (''இப்புத்தகத்தில் கூறிமுடிக்கப்பட்டுள்ள கிறிஸ்துவின் பயணங்கள்'' என்ற பட்டியலுடன் இணைந்துள்ள வரைபடத்தில் காணவும்.)*

*[11]மூலவேதவசனத்தில் ''ராஜாவின் மனுஷன்'' என்றுள்ளது. இம்மனிதர் அநேகமாக, ஏரோது அரசனின் அரண்மனையில் ஒரு அலுவலராக இருந்திருப்பார். [12]அந்த அதிகாரிக்கு இயேசுவின் தொடக்க பதிலானது (யோவா. 4:48) வழக்க மற்றதாக உள்ளது. இது ஒரு தனிப்பட்ட கடிந்துகொள்ளுதலாக இருக்கவில்லை, ஆனால் பொதுவாக மனித குலத்திற்கான ஒரு கட்டளையாக இருந்தது என்பதைக் கவனியுங்கள் ("நீ" என்ற வார்த்தை இவ்விடத்தில் கிரேக்க மொழியில் பன்மை நடையில் உள்ளது). ஒருவேளை இயேசு, கலிலேயர்களையும், அற்புதங்கள் எதுவுமின்றி, "அவரது வார்த்தையினிமித்தம்" (வ. 41) விசுவாசித்த சமாரியர்களை யும் வேறுபடுத்தி ஒப்பிட்டிருக்கலாம். ஒருவேளை இவ்வார்த்தைகள் அம்மனிதரின் விசுவாசத்தைப் பரீட்சித்துப் பார்க்கும் நோக்கம் கொண்டிருந்திருக்கலாம். எவ்வகையிலும், இவ்வார்த்தை இயேசுவை விசுவாசித்த அந்த அதிகாரியைச் சேதமாக்கவில்லை. [13]இது, இயேசு தூரத்திலிருந்து நிகழ்த்தியதாக அறியப்பட்டுள்ள நான்கு அற்புதங்களில் ஒன்றாக உள்ளது. இவற்றில், நூற்றுக்கு அதிபதியின் வேலைக் காரனைக் குணமாக்கியது மத். 8:5-13 மற்றும் லூக். 7:1-10; சிரபோனிக்கே நாட்டு பெண்ணின் மகளைக் குணமாக்கியது மத். 15:22-28 மற்றும் மாற். 7:25-30; மற்றும் பத்து தொழுநோயாளிகளைக் குணமாக்கியது (லூக். 17:11-37) ஆகியவை அடங்கியுள்ளன. [14]இது, ஒரு மனிதர் தமது விசுவாசத்தைத் தம் வீட்டாருடன் பகிர்ந்து கொள்வதற்கான பாராட்டத்தக்க உதாரணமாக உள்ளது. [15]இயேசு இதற்கு முன்பே கப்பர்நகூமுக்கு சென்றிருந்தார் (யோவா. 2:12ஐக் காணவும்). [16]இயேசு ஏன் நாசரேத்தூரில் இருந்து கப்பர்நகூமுக்கு மாறினார் என்பதை விளக்குவதற்கு, பெரும்பாலான ஒப்பீடுகள் லூக்கா 4:16-30ஐ இவ்விடத்தில் செருகுகின்றன. நான் இரண்டு காரணங்களுக்காக இதை இவ்விடத்தில் உள்ளடக்கா மல் இருக்கின்றேன்: (1) இவ்வசனப் பகுதியானது ''கப்பர்நகூமில் செய்யப் பட்டிருந்தது'' என்ன என்பதை(லூக். 4:23)க் குறிப்பிடுகிறது, ஆனால் நமது ஒப்பீட்டின் இந்த இடத்தில், கப்பர்நகூமில் ஒன்றும் செய்யப்பட்டிருந்ததில்லை. (2) புறக்கணிக்கப்படுதலின் மிக அதிகமான இயல்பு கலிலேயாவில் இயேசுவின் ஊழியத்தின் பிற்பகுதியில் இன்னு ம் சிறப்பாக பொருந்துவதாகக் காணப்படுகிறது. ஆயினும் நீங்கள், இவ்விடத்தில் இவ்வரலாற்றை செருக விரும்பலாம். [17]ஒருவேளை உங்களுக்கு நன்கு பழக்கமாகியுள்ள இந்தத் தீர்க்கதரிசனத்தின் வசனங்கள் 6 மற்றும் 7 ஆகியவற்றை வாசிக்கவும். [18]யோவான் 1:40, 41 வசனப்பகுதியானது, அந்திரேயாவையும் பேதுருவையும் திட்டவட்டமாகக் குறிப்பிடுகிறது. முன்பு நாம், பெயர் குறிப்பிடப்படாத சீஷர் யோவானாக இருக்கலாம் என்று குறிப்பிட்டோம் (யோவா. 1:37, 40). மேலும் நாம், இவ்வசனப் பகுதியின் வார்த்தை அமைப்பானது,*

அந்திரேயா தமது சகோதரரான பேதுருவைக் கண்டது போன்றே, யோவான் தமது சகோதரரான யாக்கோபுவைக் கண்டிருக்க வேண்டும் என்று கருத்துத் தெரிவிக்கலாம் என்றும் கவனித்து இருக்கின்றோம். [19]லூக்கா சுவிசேஷத்தில் "கெனசெரேத் கடல்" என்றுள்ளது (5:1), இது கலிலேயாக் கடலுக்கிருந்த இன்னொரு பெயர் ஆகும். "கலிலேயாக் கடல்" என்ற துணைப் பாடத்தில் காணவும். [20]மத்தேயு மற்றும் மாற்கு ஆகியோர் நான்காவது மனிதராக அந்திரேயாவைப் பற்றியும் கூறுகின்றார்கள். லூக்கா அந்திரேயாவைப் பற்றித் திட்டவட்டமாகக் குறிப்பிடுவதில்லை, ஆனால் பேதுருவுடன் ஒருவர் படகில் இருந்ததாக [இவர் யாக்கோபுவோ அல்லது யோவானோ அல்ல] குறிப்பிடுகின்றார் (லூக். 5:6, 7, 10). அவரது சகோதரரான அந்திரேயா அவருடன் ஒரு மீனவராக வேலை செய்து கொண்டிருந்தார் (மத். 4:18).

[21]சுவிசேஷ விவரங்களில் வேறுபாடுகள் இருக்கின்றபோது, அந்த வேறுபாடுகள் ஒப்புரவாக்கப்பட - இது எவ்வாறாகும் என்று நாம் அறியாதிருப்பினும் - முடியும் என்று அறிதலே போதுமானதாக உள்ளது. [22]இந்த நிகழ்ச்சிகள் பற்றிய முழுமையான கலந்துரையாடலுக்கு, "சீஷத்துவத் திற்கான அழைப்பு" என்ற அடுத்த பாடத்தில் காணவும். [23]வில் எட் வார்ரென் அவர்கள் தமது விரிவுரைக் குறிப்புகளில், "நான் உங்களை ஆக்குவேன்" என்ற வார்த்தையின் மீது விசேஷித்த வலியுறுத்தத்தை வைத்தார்: "ஒருவர் தாமே கற்றுக்கொண்ட பொறியாளராக இருக்க முடியும்; ஆனால் ஒருவர் தாமே கற்றுக்கொண்ட கிறிஸ்தவராக இருக்க முடியாது" (Will Ed Warren, Class Syllabus, *The Life of Christ: The Synoptic Gospels,* Harding University, 1991, 16).